


# ஜாலான் கிளாங் லாமாவில் பெரிய குழி

கோலாலம்பூர், செப். 9-

தலைநகரிலுள்ள ஜாலான் கிளாங் லாமா சாலையில் பெரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளதால் அச்சாலையைப் பயன்படுத்தும் வாகன மோட்டிகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என கோலாலம்பூர் மாநகர் மன்றம் கேட்டுக் கொண்டுள்ளது.

மண் உள்வாங்கிய சம்பவத்தால் விஸ்மா அம்பாவாங் கட்டடத்தின் முன்புறம் உள்ள சாலையில் இந்த குழி ஏற்பட்டுள்ளதாக அது கூறியது.

அச்சாலையில் திடீரென பெரிய குழி ஏற்பட்டுள்ளதால் அதனை மூடும் பணியில் தற்போது தாங்கள் இறங்கியுள்ளதாக நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் அது கூறியது.

அந்த குழியின் அருகே பாதுகாப்பு, எச்சரிக்கை பலகைகள் வைக்கப்பட்டுள்ளதால் வாகனமோட்டிகள் மிகவும் கவனமாக செல்ல வேண்டும் எனவும் அந்த அறிக்கை கேட்டுக் கொண்டது.